**தலைப்பு 270 - மாவட்டச் செயலகம், அம்பாறை**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) வறுமைக் குறைப்பு செயற்பாடுகளை விஸ்தரித்தலும் முகாமைத்துவம் செய்தலும்

(ஆ) இடர் நிவாரண மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களை நிர்வகித்தல்

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களைத் திட்டமிடலும் நிர்வகித்தலும்

(ஈ) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்

(உ) மாவட்டத்தில் செயற்திட்டங்களை நிர்வகித்தலும் தொடர்புபடுத்தலும்

(ஊ) ஓய்வூதியங்களைச் செலுத்துதல்

(எ) பிறப்புக்களை மற்றும் இறப்புக்களைப் பதிவுசெய்தல்

(ஏ) தேசிய அடையாள அட்டைகள் மற்றும் கடவுச் சீட்டுக்களின் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல்

(ஐ) காணிகள் தொடர்புபட்ட செயற்பாடுகள்

(ஒ) வருமானங்களைச் சேகரித்தல்

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) அம்பாறை

(ஆ) அட்டாளச்சேனை

(இ) அக்கரைப்பற்று

(ஈ) தெஹியத்தகண்டிய

(உ) ஆலையடிவேம்பு

(ஊ) தமன

(எ) இறக்காமம்

(ஏ) கல்முனை – முஸ்லிம்

(ஐ) காரைதீவு

(ஒ) லஹுகல

(ஓ) மஹஓயா

(ஔ) நிந்தவூர்

(க) நாவிதன்வெளி

(கா) பொத்துவில்

(கி) பதியதலாவ

(கீ) சாய்ந்தமருது

(கு) சம்மாந்துறை

(கூ) திருக்கோயில்

(கெ) கல்முனை - தமிழ்

(கே) உஹன

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ்

கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 28 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.5 கணக்காய்வு அவதானிப்பு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அம்பாறை மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 1.6 முதல் 1.15 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களை தவிர்த்து திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) ஏடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை**

மாவட்டச் செயலகத்தினால் 1978 திசெம்பர் 19 ஆம் ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

### (i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,383,687,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,382,059,431 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,627,569 அல்லது 0.12 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 673,687,000 | 672,588,832 | 1,098,168 | 0.16 |
| மூலதனம் | 710,000,000 | 709,470,599 | 529,401 | 0.07 |
| மொத்தம் | **1,383,687,000** | **1,382,059,431** | **1,627,569** | 0.12 |

### (ii) பாதீட்டு முரண்

ஒரு செலவின விடயத்திற்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயத்திற்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 74 சதவீத அளவைக் கொண்டிருந்தது.

### (iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 27 அமைச்சுக்கள் மற்றும் 20 திணைக்களங்களினால் மாவட்டச் செயலகத்திற்கு ரூபா 2,872,937,399 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து முறையே ரூபா 539,278,783 மற்றும் ரூபா 2,273,317,186 என ரூபா 2,812,595,969 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 38,619,594 மற்றும் ரூபா 21,721,836 என ரூபா 60,341,430 கூட்டுத்தொகை அல்லது வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் முறையே 1 சதவீதம் மற்றும் 7 சதவீத அளவு நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 27001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27001 | 55,000,000 | 49,679,000 | 40,000,000 | 43,657,498 | 183,000,000 | 148,912,400 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அம்பாறை பிரதேச செயலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்களால் பெறப்பட்டிருந்த இடர் கடன்களிற்காக 2013 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களிற்குரிய ரூபா 1,616 வட்டியினை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்டச் செயலகத்தின் 2008 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 124,576 கடன் மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அட்டாளச்சேனை மற்றும் உஹன பிரதேச செயலகங்களில் பணியாற்றி பதவி வறிதாக்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 152,070 கூட்டுமொத்தமான இரண்டு இடர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 6003/0000/000/0046/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 284,080,400 ஆக இருந்தது. அந்த மீதியிலுள்ள உஹன பிரதேச செயலகத்தின் 2 வருடங்களை விஞ்சிய

ரூபா 407,847 தொகையான 137 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான அச்சிடல் இயந்திரம் மற்றும் ஸ்கேன் இயந்திரம் என்பன கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 04 ஆண்டு காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.8 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | **ரூபா** | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| (i) XIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | 3,500 | ஏழு மைல்களிற்கு மேற்பட்ட தூரம் பயணித்தால் மாத்திரமே இணைந்த படி செலுத்த முடியுமான போதிலும், 3.75 மைல்கள் (6 கி.மீ.) பயணித்தமைக்காக மஹஓய பிரதேச செயலகத்தினால் இணைந்த படி செலுத்தப்பட்டிருந்தது. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**

| | | |
|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 138 | 18,999,544 | 2013 செப்தெம்பர் மாதத்தில் கல்முனை பிரதேச செயலகத்தினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்படாது ரூபா 18,999,544 ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 237(அ) | 740,531 | 2013 ஆம் ஆண்டில் 11 மழை நீர் தாங்கிகளை நிர்மாணிப்பதுடன் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் திருப்திகரமாக வேலைகள் செய்யப்பட்டுள்ளன மற்றும் பரிந்துரைகளிற்கு அமைவாக உள்ளன என்ற சான்றுப்படுத்தல் இன்றி மஹஓய பிரதேச செயலகத்தினால் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப்பிரமாணம் 237(ஆ) | 20,250 | 2013 ஆம் ஆண்டில் மஹஓய பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட தொலைநகல் இயந்திரம் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டதாக கொடுப்பனவு உறுதிச் சிட்டையில் குறிப்பிடாது கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது. |
| (iv) நிதிப்பிரமாணம் 396 | 139,724 | அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு 6 மாதங்களிற்கு மேல் காலம் கடந்திருந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நிதிப்பிரமாணம் 756 | 889,000 | 2013 சனவரி 01 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 89,000 பெறுமதியான இரண்டு CPU மற்றும் 2013 ஆகஸ்ட் 21 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 800,000 பெறுமதியான 01 மின்பிறப்பாக்கி என்பன கல்முனை (முஸ்லிம்) பிரதேச |

| | | |
|---|---|---|
| | | செயலகத்தினால் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்**

| | | |
|---|---|---|
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 21 கணனிகள், கணனிகள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்ட அமுல்படுத்தல் பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆகஸ்ட் 14 ஆந் திகதியளவில் ஆரம்பிக்கப்பட வேண்டிய நட்பிட்டிமுனை கல்/அல் - லாபிர் வித்தியாலயத்தின் ரூபா 1,990,752 மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட கணனி ஆய்வுகூட நிர்மாண ஒப்பந்தம் கல்முனை பிரதேச செயலகத்தினால் அந்த வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்குக் கையளிக்கப்பட்டு பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 15 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட வேண்டிய கல்/மருதமுனை அல் - மதீனா வித்தியாலயத்தின் ரூபா 1,990,752 மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட கணனி ஆய்வுகூட நிர்மாண செயற்திட்டம் கல்முனை பிரதேச செயலகத்தினால் அந்த வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தச் சங்கத்தின் நிதி நிலைமை மோசமாக காணப்பட்டமையால் 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத் திகதி வரை அதற்காக ரூபா 357,866 செலுத்தப்பட்டிருந்தது.

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறைகளிலிருந்து விலகுதல்**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்காக அம்பாறை மாவட்டச் செயலகத்தினால் கொள்வனவுக் குழுக் கூட்ட அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நிமித்த உப கட்டுநிதிகளை கைவசம் வைத்திருத்தல்**

2013 ஆம் ஆண்டில் பல்வேறு நோக்கங்களிற்காக மாவட்டச் செயலகத்தின் மூன்று உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 50,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் குறித்த பணிகளிற்காக பயன்படுத்தப்படாது 20 நாட்கள் முதல் 30 நாட்கள் வரையான காலவீச்சில் கைவசம் வைத்திருக்கப்பட்டு பின்னர் கட்டுநிதி முழுவதும் தீர்க்கப்பட்டிருந்தது.

**(இ) அனுமதியற்ற நிர்மாணங்கள்**

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் (கரையோர வளங்கள் முகாமைத்துவ) பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட 2014 சனவரி 31 ஆந் திகதிய PA/106/MS/13/535 ஆம் இலக்க கடிதத்தின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் நிரந்தர அல்லது தற்காலிக நிர்மாணங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள பொது விளையாட்டு மைதானங்களில் மேற்கொள்ளப்பட முடியாத போதிலும், கல்முனை (முஸ்லிம்) பிரதேச செயலகத்தினால் அதற்கு முரணாக நிரந்தர நிர்மாணங்களிற்கு ரூபா 468,253 செலவிடப்பட்டு அக் கட்டிடத்தின் அத்திவாரம் பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.11 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

மாவட்டச் செயலகத்தின் மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,464,999 பெறுமதியான 114 சைக்கிள்களும் ரூபா 1,456,350 பெறுமதியான 73 தையல் இயந்திரங்களும் அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்குறிப்பிட்ட சைக்கிள்களும் தையல் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தமையினை உறுதிப்படுத்தும் பொருள் பெறுவனவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரின் 2014 பெப்ரவரி 06 ஆந் திகதிய ஈபி/19/டீ1/பீஆர்டீ ஆம் இலக்க கடிதத்தின் படி மேற்படி நலனாளிகளிடமிருந்து அந்த உபகரணங்களின் பெறுமதியில் 50 சதவீதம் அல்லது ரூபா 1,460,675 அறவிடப்பட்டு மீண்டும் அச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், பிரதேச செயலகம் அது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) சுய தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

சமுர்த்தி அதிகாரசபையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற ‘‘ஜாதிக சவிய’’ செயற்திட்டத்தின் கீழ் அவரவர்களது சுய தொழில்களை முன்னேற்றிக் கொள்வதற்காக பொத்துவில் பிரதேச செயலகத்தினால் கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், அக் கடன் தொகைகளை 3 ஆண்டுகளிற்குள் முழுமையாக மீள அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2008/2009 ஆம் ஆண்டில் 131 ஆட்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,020,000 கடன் தொகையிலிருந்து ரூபா 306,620 அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த நிலுவை மீதிகள் 03 ஆண்டு காலமாக காணப்பட்டு வருகின்ற போதிலும், அறவிடுவதற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் பிரதேச செயலகத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முட்டை உற்பத்தியினை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டம்

பண்ணைகளை வலுப்படுத்தி முட்டை உற்பத்தியினை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் ஆளொருவருக்கு 10 கோழிக் குஞ்சுகள் வீதம் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் பொத்துவில் பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆளொருவருக்கு 10 கோழிக் குஞ்சுகள் வீதம் 270 உற்பத்தியாளர்களிற்கு ரூபா 1,080,000 செலவில் 2,700 கோழிக் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த கோழிக் குஞ்சுகளில் 1,317 குஞ்சுகள் 2014 ஒக்தோபர் 28 ஆந் திகதி வரையிலும்

இறந்திருந்தன. இறந்த குஞ்சுகளின் பெறுமதியான ரூபா 526,800 பயனற்றதாகியிருந்தது. அதன் காரணமாக, அந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை அடைய முடியாது போயிருந்தது.

(ii) 2700 குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பகிர்ந்தளிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம், 2,640 குஞ்சுகள் மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய 60 குஞ்சுகளிற்காக ரூபா 24,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.12 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் திணைக்களத்தினால் CBG (Criteria Base Grant) செயற்திட்டத்தின் கீழ் ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவில் அபிவிருத்திச் செயற்பாடுகளை நிறுவும் நோக்குடன் சமூக பொருளாதாரக் கற்கைகள் அபிவிருத்திச் சங்கத்திற்கு இரண்டு கணனிகளை வழங்கும் நோக்கில் ரூபா 190,000 பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அத் தொகையினை குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தாது இரண்டு ஆண்டு காலமாக பிரதேச செயலகத்தின் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தினால் 103 ஜயபூமி காணி உறுதிகளை அக் காணிகளின் உரித்தாளர்களிற்கு பகிர்ந்தளிப்பதற்கு 10 ஆண்டுகளிற்கும் மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட காணிச் கச்சேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த காணிகளுடன் சம்பந்தப்பட்ட 986 முறைப்பாடுகளிற்கு அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தினால் 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சமுர்த்தி உதவிபெறுனர் ஒருவருக்கு மருத்துவ உதவிக்காக 2013 திசெம்பர் மாதத்தில் எழுதப்பட்ட ரூபா 2,600 பெறுமதியான காசோலை 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) ஊனமுற்ற ஆட்களினால் அவர்களிற்குத் தேவையான உபகரணங்களை (மூக்குக் கண்ணாடி, தள்ளு நாற்காலிகள், ஊன்றும் கோல்கள் மற்றும் Ear phone) பெற்றுக்கொள்வதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 18 மற்றும் 13 விண்ணப்பங்கள் அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. 2014 செப்தெம்பர் 27 ஆந் திகதி வரை அவற்றை ஊனமுற்றோர்களிற்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தில் 2013 திசெம்பர் மாதத்தில் எழுதப்பட்ட ரூபா 176,999 பெறுமதியான 05 காசோலைகள் 2014 செப்தெம்பர் 27 ஆந் திகதி வரை உரியவர்களிற்கு வழங்கப்படாது விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் கைவசம் வைக்கப்பட்டிருந்தது.

(எ) சமூக சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஊனமுற்றோர்களிற்கான வீடமைப்பு உதவியாக அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்கு 2013 சனவரி 17 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 100,000 தொகை 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் செலுத்தப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2011 முதல் 2014 ஆம் ஆண்டு வரை சுயதொழில்களிற்காக சமூக சேவைகள் திணைக்களத்தினால் அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 52,600 தொகை சுய தொழில்களின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தினால் நிலையான சொத்துக்கள் முகாமைத்துவ முறைமை மென்பாகமொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 54,000 தொகை 2013 யூன் மாதம் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த உபகரணம் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2014 ஆகஸ்ட் வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.15 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 67 | 51 | 16 | 0 |
| (ii) | மூன்றாம் நிலை | 41 | 11 | 30 | 0 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,091 | 824 | 267 | 0 |
| (iv) | ஆரம்ப நிலை | 213 | 194 | 21 | 2 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 5 | - | 5 |
| | மொத்தம் | 1,412 | 1,085 | 334 | 7 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

334 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.